# செவ்வானம்

ஐப்பசி 2006 | ஆரம்பம் : 2003 | இதழ் : 15 | இலவசம்


## புதிய ஆரம்பம் உருவாகட்டும்

கடந்த ஆவணித் திங்கள் 11ஆம் திகதிக்கு பின் ஏற்பட்ட நாட்டுப் பிரச்சினை கரையோரக் கிராம மக்களை பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்கியது.. மூவாயிரத்திற்கு மேற்பட்ட சிறு தொழில், பெரும் தொழில், ஆழ்கடல் மீன் பிடிகள் முடக்கப்பட்டுள்ளன. அன்றாடம் கடலை நம்பி வாழுகின்ற குடும்பங்களுக்கு இன்று வரை சுபீட்சம் காணப்படாதது கவலைக்குரிய விடயமாகும்.

காலத்திற்கு காலம் ஏற்படும் 'போர்', முறைக்கு முறை கரையோரப் பகுதி மக்களுக்கு சுமையாக மாறுகின்றது. கல்வி. சமூக அபிவிருத்தி, பொருள் இழப்புக்கள் இழக்கப்படுகின்றன. பின் தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்காக எடுக்கப்படும் விடயங்கள் பயனற்றுப் போகின்றன. சட்டங்கள் ஒழுங்குகள் இல்லாது செம்மறிக் கூட்டங்களாக பர்ணமிக்கின்றன. ஊரின் மேல் பற்றுஉள்ள அனைத்து உள்ளங்களின் கனவுகளுக்கும், கல்வியறிவற்ற ஒரு சில வர்க்கத்தின் சல்லடைகள் முட்டுக் கட்டையாகின்றன. கஷ்டமான இந்த நேரத்தில் கொடையாளிகள் தூங்குகின்றனர். வாடிய சமூகத்திற்கு புத்தொளி ஊட்டப்படல் அவசியமான தொன்றாகும்.

புலம் பெயர்ந்து வாழும் மக்களின் அரவணைப்பை சமூக திட்டமிடல் பொதுப் பணியினர்களின் கூட்டான செயலில் ஏற்படுத்த வேண்டும். மற்றவர்களில் தனிக்குடும்பங்கள் வாழ்நாள் முழுவதும் தங்கியிராமல் பொதுநன்மை கருதி 'நிதியம்' அமைக்கப்படல் வேண்டும். கடற்றொழில் சங்கங்களுக்கு காலத்திற்கேற்ப ஆலோசனைச் சபைகள் நிறுவப்பட வேண்டும். சமூகத்தைச் சேர்ந்த அருள் பணியாளர்கள் வாடி வதங்கும் குடும்பங்களுக்கு தனிப்பட்ட முறையில் கவனயீர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இன்றைய இளைஞர்கள் நாளைய சமூதாயத்தினர் என்று சொல்லி பெரியோர்கள் பணியாற்றிய சமூக செயல்பாடுகளை மேற்கொள்ளாதிருப்பது. அர்த்தமற்ற செயலாகும். எனவே ஒரு 'புதிய ஆரம்பம்' உருவாகட்டும். ■

## இறப்பில்லை உன் இருப்பிற்கு

– அருள்திரு எம். எல். தயாகரன்

எங்களின் சோகம்
எங்களோடு போகட்டும்
இனி எந்தவொரு
இனத்திற்கும் இப்படி
நிகழக்கூடாது.

வேர் உழுத்த வேப்பமரம்
சட்டென பாறி
விழுந்தது போல
நின்றெழுந்த எம்மூரின்
நிம்மதியெல்லாம்
அன்றொருநாள் மாலை
ஆறு மணிக்குப் பின்
கண்ணீருக்குள் மூழ்கிவிட்டது
அன்றிலிருந்து
எம் அடுப்புக்குள்
பூனைதான் படுக்கிறது.

"முப்பது நாளுக்கு மேலாக
நம்மூர்
மூச்சடங்கிப் போனது, இதுதான்
முதல் தடவை"
ஒரு மூதாட்டி சொன்னாள்
நம் பேச்சடங்கிப் போச்சு...

அப்பதான் தெரிஞ்சுது
நம் அடிவயிற்றின்
ஆட்டம் எல்லாம்
அரைப் பிடி அரிசி
இருக்கும் வரை என்று.

பால்குடி என்று
சொன்ன தாயைப் பார்த்து
"அம்மா இது முலையா
இல்லை நீ
முந்தானையில் மூடிவைத்த
சதையா" என்று
முணுமுணுத்ததாம்.

பாவம் அவள்
சோற்றுக்கே வழியில்லாத
அவளுக்கு
ஊற்றெடுக்குமா முலையிலே
பால்.

"நீங்கள் என்ன
சோமாலியாவின் சொந்தங்களா?"
என்றார்கள் நம்மைப் பார்த்து.

கூட்டுக் குடும்பங்கள்
எல்லாம்
குலைஞ்சு போச்சுது.

வளைஞ்சு நெளிஞ்சு
ஓடித்திரிஞ்சு
சின்ன வட்டங்கள் எல்லாம்
இப்ப அலைஞ்சு
திரியுதுகள்
அரிசி, மா, சீனிக்கு.

பெறுமாதங்கள் எல்லாம்
கும் இருட்டில
வயிறு குத்துது என்று
குளறும்.
அவசரத்துக்கு ஒரு
அம்புலன்ஸ்
பிந்தி வரும்.

பிள்ளாய்
இதுவெல்லாம் உனக்கு
புதிதல்ல.
ஏனென்றால்;
உன் தொப்புள் கொடியை
தாதி அறுத்தபோது
நீ இரத்த நிலத்தில்தான்
விழுந்தாய்.

தாய்ப்பால் பருகும்
பருவத்தில்
பச்சைத் தண்ணி
பருகி வளர்ந்தவன் நீ.

பிச்சை எடுப்பதில்லை
இனி என்று
மூச்சை விடவும்
துணிந்தவன் நீ.

அதனால்,
இருபது வருடமல்ல
இருபது ஜென்மம்
போனாலும் உன்
இருப்புக்கு இறப்பில்லை.

கோயில் முற்றத்திலே
நீ முடங்கிப் படுத்தாலும்

தொடர் - பக்கம் 3

# இன்று நமக்குத் தேவை நல்லதோர் தலைமைத்துவம்

– வி. ஜே.

1990 முதல் குருநகர் மக்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில், யுத்தம் காரணமாக இடம்பெயர்வுகளை மேற்கொண்டுள்ளார்கள். அயற் கிராமங்களுக்கு இடம் பெயர்ந்து செல்வதும், சுமூகமான நிலை திரும்பியதும் தமது இருப்பிடங்களுக்கு மீள்வதும் மிகச் சாதாரணமாகவிருந்தது. சிலர் தென் இலங்கைக்கும், தென் இந்தியாவிற்கும், வெளிநாடுகளுக்கும் நிரந்தரமாகவே இடம் பெயர்ந்துள்ளனர்.

இத்தகைய இடப் பெயர்வுகளின்போது அவர்கள் தமது வளம் நிறைந்த தொழில்களை, இருப்பிடங்களை உடமைகளை மற்றும் மேலான உறவுகளையும் இழந்திருக்கின்றார்கள். இந்த இடப்பெயர்வுகளால் அவர்கள் மத்தியில் ஏற்பட்ட அரசியல், கல்வி, சமய, சமூக, கலாசார மாற்றங்கள் அனந்தம்.

அண்மையில் ஆகஸ்ட் 11 ஆம் திகதி முகமாலையில் ஏற்பட்ட மோதல் காரணமாக ஓர் இடப்பெயர்வு நடைபெற்றது. முன்னைய காலங்களில் அவர்கள் பெற்ற அனுபவங்களினால் இம்முறை யாகப்பர் ஆலயம், பெண்கள் பாடசாலை, கார்மேல் மண்டம், திருக்குடும்ப கன்னியர் மடம், புனித பத்திரிசியார் கல்லூரி, புனித சாள்ஸ் பாடசாலை மற்றும், அடைக்க நாயகி ஆலயத்திலும் பரவலாக தஞ்சம் புகுந்த அவர்கள் மிகுந்த கஷ்டங்களை எதிர்கொண்டுள்ளமை கண்கூடு. ஆகஸ்ட் 11ஆம் திகதி தொழிலுக்குப் போய் மீள வரமுடியாமல் வன்னிக்குச் சென்ற 126 பேரும், மடுத்திருப்பதிக்கு யாத்திரை சென்ற 1200 பேர் வரையிலானோரும் இன்று வரை ஊர் திரும்பவில்லை. இவர்களைப் பற்றி அக்கறை கொள்வோர் எவரும் இல்லை. இது பற்றி நடவடிக்கை எடுக்கவேண்டியவர்கள் வேறு விடயங்களிலேயே அக்கறை கொண்டுள்ளனர்.

இங்கு இடம் பெயர்ந்தும், தம் சொந்த இல்லங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் குருநகர் மக்களில் பலர் வருமானமின்றி, வறுமையிலும் பட்டினியிலும் வாடிக்கொண்டிருக்கின்றனர். பங்கு மக்களை வழிநடத்த வேண்டியவர்கள், தொழிலாளரின் நலன் பேண வேண்டிய சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் யாவும் மௌனித்து நிற்பது வியப்பைத் தருகின்றது. அன்பியம், பகிர்தல் பற்றியெல்லாம் பெரிதாகப் பேசியவர்கள் அதற்குரிய வேளை வந்தபோது ஏன் செயலற்றுப் போனார்கள்.

குருநகர் மக்களின் பிரச்சனைகள் தினமும் பல்வேறு பரிமாணங்களில் விரிவாக்கம் பெறுவதை சமூக பிரக்ஞை உள்ள எவராலும் அடையாளம் கண்டுகொள்ள முடியும். பெருகிவரும் மக்கள் தொகை, இளைஞர் யுவதிகளின் அசாதாரணப் பெருக்கம், வேலை வாய்ப்பின்மை, வீழ்ச்சி காணும் கல்வி - விளையாட்டு - கலை கலாசார நடவடிக்கைகள் மற்றும் பல.

இவற்றையெல்லாம் வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டுமானால் குருநகருக்கென ஒரு வேலைத்திட்டத்தை நாமே உருவாக்கி அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். இன்று நமக்குள்ள தேவை நல்லதோர் தலைமைத்துவம். துறைசார்ந்தோரும், சமூக நலன் விரும்பிகளும் உள்ளடங்கலாக ஒரு சிறப்புக் குழு அர்ப்பணத்துடன் இயங்கவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். மாற்றங்கள் கண்டுவரும் அரசியல், சமய, சமூக, பொருளாதார, கலாசார சூழலுக் கேற்றவாறு சமூகத்தின் தேவைகளை சாதுரியத்துடன் வழங்கக்கூடிய ஒரு அமைப்பாக அது இயங்க வேண்டும். ஆற்றல் மிக்க இளைஞர்கள் முன்வரவேண்டும். மேலும் பணிகளை சிறப்புற நிர்வகிப்பதற்கு நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய ஒரு செயலகம் இன்றியமையாததாகும். தற்போதைய சூழலில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியை உரிய விதத்தில் புனரமைத்து ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுவது பற்றி பரிசீலிக்கலாம்.

புலம் பெயர்ந்து வாழும் குருநகர் மக்கள் யாவரும் இன்னல்கள் மத்தியில் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் உடன் பிறப்புக்களின் எதிர்காலம் பற்றி அக்கறையுடன் உழைக்கவேண்டிய காலமிது.

# கலைவானம் - 2

## அண்ணாவியார் பாவிலோன் செபமாலைசின்னத்துரை



### பக்கிரி சின்னத்துரை

### 1905 - 1985

குருநகர் மண்ணின் புகழ் பாடும் ஒப்புயர்வற்ற இசை நாட்டுக்கூத்து கலைஞனாகத் திகழ்ந்தவர் 'பக்கிரி சின்னத்துரை' ஆவர். 1905 ஆம் ஆண்டு பிறந்த இவர் சிறுவயதிலிருந்து சங்கீதத்தை முறையாகக் கற்றுத் தேர்ந்த பின்னர்தான் இசை நாடகத்திற்குள் நுண்புலத்தோடு நுழைந்தார். பிற்பாட்டுக்காரர் இல்லாமல் ஆர்மோனியம் இசையே பின்னணியாகத் துலக்கப்பாடும் வல்லமை இவர்போல் யாருக்கும் வாய்த்ததில்லை. இதனடிப்படியே 1939 ஆம் ஆண்டு 'சங்கீத பூஷணம்' பட்டம் பெற்றார்.

1975 ஆம் ஆண்டு 'தினகரனால்' நடாத்தப்பட்ட அண்ணாவிமாருக்கான மகாநாட்டில் 'அண்ணாவி'க்கான சான்றிதழை பெற்றார். தமிழ் நாடகக் கலையின் மூலவேர்களில் ஒன்றான, எமது பாரம்பரியக் கலையான நாட்டுக்கூத்தில் ஆழ வேரூன்றி, மரபில் பிசகாமல் நின்றவர் பக்கிரி சின்னத்துரையாவர்.

சிங்களவரின் கண்டி நடனத்தில் பிரசித்தி பெற்றிருந்த அளவிற்கு ஈழத்தமிழரின் பாரம்பரிய உயர் கலை நமது மக்களால் மதிக்கப்படவில்லை என்பதை நன்குணர்ந்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் தென்னிந்தியக் கலைஞர்களுடன் நாடகங்களில் நடிக்கும் தகுதியும் இசைஞானமும் அண்ணாவியாரிடம் காணப்பட்டதால் தென்னிந்தியாவில் அக்காலத்தில் பிரபல்யமாக விளங்கிய நாடக நடிகர்களுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் (இப்பொழுது மனோகரா தியேட்டர் இருக்கும் இடம்) ஞானசௌந்தரி நாடகத்தில் பிரதான பாத்திரத்தில் நடித்துள்ளார்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் பொம்மைப் 'பாஸ்' நடாத்திய காலத்திலும், பின்னர் பெரிய வெள்ளிக்கிழமையன்று இடம்பெறுகின்ற இயேசு சிலுவையில் அறைந்து மரணிக்கும் ஆற்றுகை நிகழ்விலும் அண்ணாவியார் எட்டாம் பிரசங்கம் வாசிப்பார்.

இவருக்கு புகழ் கொடுத்ததும், பலதடவைகள் மேடையேற்றப்பட்டதுமான 'தேவசகாயம்பிள்ளை' நாட்டுக்கூத்து பின்னாளில், புனித யாகப்பர் திருவிழாவை யொட்டி 1971 ஆம் ஆண்டு குருநகர் கலையரங்கிலும், சேந்தாங்குளம் புனித அந்தோனியார் ஆலய திருவிழாவையொட்டி 1975 ஆம் ஆண்டு ஆலய முன்றலிலும் அரங்கேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**கவிஞர் மா. சி. கிறிஸ்ரியன்**

'செவ்வானம்' இலவச இதழில் பிரசுரிக்கக்கூடிய ஆக்கங்களை, தகவல்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.
நீங்கள் எழுதி அனுப்பவேண்டிய முகவரி

ஆசிரியர் 'செவ்வானம்'
பணிமனை,
சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகம்
அடப்பன் வீதி, 1ம் ஒழுங்கை,
குருநகர், யாழ்ப்பாணம்.

சிறுகதை

# வெறும் வயிறுகள்

S.A. அழகராஜா

காதைப் பிளக்கும் செல் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுக்களும், இடையிடையே வெளிச்சக் குண்டுகளின் ஓசையும் உடம்போடு பழகிப்போய்விட்ட அந்தக் கடற்கரைக் கிராமத்தின் மத்தியிலிருந்து சற்று இடம்பெயர்ந்து, அருகிலுள்ள ஆலயத்தில் இரவுப் பொழுதைக் கழித்துக்கொண்டிருக்கும் குடும்பத் தலைவனான அந்தோனி, ஊரடங்குச் சட்டத்தையும் கருத்தில் கொள்ளாமல் நீண்ட ஒரு கொட்டாவியுடன் எழுந்து இருட்டோடு இருட்டாக தனது கடற்றொழிலுக்கான பிளாஸ்ரிக் பைவரை தடுக்கி விழாத குறையாகத் தடவிப் பிடித்து தொழிலுக்குச் செல்ல ஆயத்தமாகிறான்.

அப்போது அதிகாலை நேரம் 3.00 மணி "என்னப்பா கரையில இருந்து 100 யாரும் வராத தூரத்துக்குள்ள தப்புத் தண்ணிக்க தொழிலுக்குப் போறதுக்கு பாலைதீவு, கச்சதீவுக்குப் போறமாதிரி நடுச்சாமத்தோட எழும்பிட்டியள்" இது பைவர் சத்தம் கேட்டு திடுக்கிட்டெழுந்த மனைவி திரேசாவின் குரல்.

"என்னடியப்பா செய்றது? வெள்ளனப் போனாத்தானே நேரத்தோட வந்து வித்துப்போட்டு பாணாவது வாங்கலாம். கடற்கரையிலே நாங்க கொட்டிப்போட்டு வாற ஒரு ரூவாக் குத்தியளவு கடுக்காய் நண்டு கூட கொள்ளை விலை போகுது. விக்கிற எங்களுக்கும் பாவம்; வாங்கிறதுகளும் பாவம்... கடவுளே எப்பதான் எங்கட கடல் வெளிக்குமோ...."

"ஓமோம். கருங்கண்ணிப் பாரையும், கடல்விராலும் துண்டு துண்டாக திண்ட எங்களுக்கு இப்ப கறுவாச்சள்ளை கூடக் கிடைக்குதில்லை."

"ம்... இது எங்கட காலம். சரி... இண்டைக்காவது தேத்தண்ணி இருக்கோ..."

"சீனி இல்லையப்பா... கோயில் விறாந்தையில சனங்களெல்லாம் நித்திரை... நீங்க உந்த வெள்ளன எழும்பி.... தொழிலுக்கப் போறனெண்டு நிக்கிறியள்..."

"எடியே... மகன் சேகர தூரக்கீரப் போக விடாத... தெரியுந்தானே ஊரில என்ன நடக்குதெண்டு... ஏன் செத்தாங்க எதுக்கச் செத்தாங்கள் என்று தெரியால் நாய், பூனை மாதிரி ஒரு நாளைக்கு சராசரியா ஏழெட்டுப் பிணங்கள் றோட்டில விழுகுது."

"இளந்தாரிப் பிள்ளையள் சொன்னாக் கேக்குமே... எப்படித்தான் சொன்னாலும் தாங்க நினைச்சபடி ஆடித்தான் தீருங்கள்..."

"ம். சரி சரி... சாமத்தோட போய் அவங்கட முள்ளுக்கம்பி வேலிக்குக்கிட்ட குந்திக்கொண்டிருந்தாத்தான் பாசைக் குடுத்து பேச்சோ, அடி உதையோ வாங்கி கடலுக்க இறங்கலாம்.

"கவனமப்பா... நல்ல வேளை என்ற இளந்தாரிப் பிள்ளை இப்படி அவலமான நேரத்தில கடற்தொழிலப் பழகேல..."

"பழகிறதோ... 20 வருஷமா கடலுக்கு இறங்க விடாம காவல் போட்டு வைச்சிருக்கிறதால.... நம்மட ஊரில அரைவாசிப் பிள்ளைகளக்கு கடலும் தெரியாது. நீந்தவும் தெரியாது..."

"ம்.. இனி வாற காலத்தில எங்கட ஊர்ப் பிள்ளைகள் கடல்த்தொழிலையே மறந்திடும்..."

"....ம்.. எல்லாம் எங்கட காலம்.... சரி..சரி.. நான் போட்டு வாறன்...."

"வெள்ளன வாங்கோ... ஒரு சாமானுமில்லை... அரிசி 120 ரூபா, சீனி 200 ரூபா, தேங்காய் 55 ரூபா... நீங்க போய் வந்தாப் பிறகுதான் எல்லாம்....."

பைவரைத் தோளில் போட்டபடி நீண்ட பெருமூச்சொன்றை விட்டவாறு ஆலயத்தின் பின் வீதியிலிறங்கி நடக்கத் தொடங்கினான்..

"அம்மா தேத்தண்ணிக்குச் சீனி காணாது" – இது மகன் சேகர்.

"தம்பி... சீனி விக்கிற விலை தெரியுமெல்லோ... பேசாமக் குடி..."

"எனக்கு வேண்டாம் போ..."

"காலம் தெரியாத பிள்ளை... கடையளில தேத்தண்ணியுமில்ல; ரொட்டி, றோசுமில்லை... இப்ப நீ ஓட வெளிக்கிட்டாத்தான் எங்கயும் பாணாவது வேண்டலாம்..."

நிலைமையைப் புரிந்து கொண்ட சேகர், மனம் சலித்தவாறே தேநீரைக் குடித்துவிட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு, பாண் கியூவில் நிற்பதற்காகப் புறப்பட்டான் – அப்போது நேரம் 5.30..

பாணுக்குச் செல்லும் வழியிலுள்ள ஒரு சந்தியில் ஊரடங்கு தளரும் நேரம் வரை மறித்து வைக்கப்பட்ட சேகரும் வேறு சிலரும் ஆறுமணிக்குப் பின்னரே சந்தியைத் தாண்ட அனுமதிக்கப்பட்டனர்.

அவன் பேக்கரியை அண்மித்தபோது ஆயிரக்கணக்கான மக்கள் ஒரு இறாத்தல் பாணுக்காக வரிசையில் முண்டியடித்துக் கொண்டு நின்றனர். சேகரும் ஒருவாறு வரிசையில் சேர்ந்து எறும்பாக ஊர்ந்து பேக்கரிக் கதவை அண்டியபோது "பாண் முடிந்துவிட்டது" என்ற அறிவிப்புப் பலகை தொங்கவிடப்பட்டது.

பைத்தியம் பிடிக்காத குறையாய் தாய் ஆறுதல்படுத்தி "பரவாயில்லை தம்பி.. அப்பா வெள்ளன வந்திடுவேர்... வந்தோண சமைக்கலாம்... நீ வெள்ளனப் போய் கூப்பன் கடையில நிண்டியெண்டா நிவாரணச் சாமான்களைக் கொண்ணந்திடுவாய். ஓடு...ஓடு... ரெண்டு ஓடியல் எடுத்துக் கொண்டு போனியெண்டாக் கடிச்சுக்கொண்டு நிப்பாய்."

சேகர் இரண்டு, மூன்று உரப்பை களையும் தங்களது 'இ'னாக் காட்டையும் எடுத்துக்கொண்டு சங்கக்கடைக்குப் போகிறான். நேரம் 8.00 மணி.

கடலுக்குச் சென்ற அந்தோனி, முகத்தைத் தொங்கப்போட்டவாறு திரும்பி வருவதைக் கண்ட திரேசா ஏங்கிப் போனாள். "என்னப்பா..."

"கடலல்ல ஏதோ பிரச்சனையாம்... தொழிலுக்கு விடேலயாம்... நாங்களும்.... எங்கட காலமும்...."

"சுதந்திரமா... நினைச்ச நேரம் மீன் பிடிச்ச கடல்.... இப்ப கரையப் பாக்கிறதுக்கே... எங்கட வீடுகளில கழட்டி மறைப்பாய் போட்டிருக்கிற சீற்றுகளுக்கு உள்ளாலதான் பாக்கோணும். என்ன செய்வம்" சலித்துக் கொண்டாள் திரேசா.

"சரி..சரி சேகர் எங்க போய்ற்றான் ...."

"கூப்பன் கடைக்கு."

"ஏனடியப்பா வெள்ளன விட்டனி..."

"கியுவில நிண்டாத்தானே வெள்ளன வரலாம்...

சொல்லிக்கொண்டிருக்கும் போதே மகன் சேகர் திரும்பி வருகிறான். ஆச்சரியமடைந்த திரேசா

"என்னவாம் ராசா..."

"ராத்திரி கூப்பன் கடையை உடைச்சுப் போட்டாங்களாம். இண்டைக்குச் சாமான் இல்லையாம்."

"எங்கட காலத்தைப் பாத்தீங்களே அப்பா..."

"இனி உதுதானடியப்பா எங்கட காலம். எங்கட கடல் வெளிக்காட்டி எங்கட வயிறு வெறும் வயிறுதான். சரி சமையலுக்கு என்ன பண்ணப்போறாய்."

"மீன் வித்தவங்களெல்லாம் இப்ப கோயில் வாசலில மரக்கறி விக்கிறாங்கள். அதில போய் அரைக் கிலோ மரவள்ளிக் கிழங்கு வாங்கியாங்கோ. அவிச்சுப் போட்டு சம்பல் இடிக்கலாம்."

அந்தோனி பெருமூச்சு விட்டவாறே சந்தைப்பக்கம் செல்ல, மகன் சேகர் நண்பர்களைத் தேடி சந்திப் பக்கம் செல்ல திரேசா அடுப்பில் ஏறி பல நாட்களாகி விட்ட சமையற் பாத்திரங்களைப் பார்த்து பெருமூச்சு விடுகிறாள்.

*யாவும் கற்பனையல்ல* ■

**இறப்பில்லை...**

அந்த முடக்கத்துக்குள்
ஒரு அலையே
அடங்கியுள்ளது என்று
எல்லோருக்கும் தெரியும்

அலை ஓய்ந்து விட்டதே
கடல் காய்ந்து விட்டதே
கால் நனையவில்லையே
என்று
கலங்காதே.

இனியொரு முறை
இந்த நிலை
இருக்கக்கூடாதென்று
இன்றே உன்
இருப்பிற்கு
இயக்கம் கொடு. ■

# தகவல்கள்

## அறிமுக விழா

கவிஞர் மா. கி. கிறிஸ்ரியனின் 'புயலுக்குப் பின்' (நாவல்) நூல் குருநகர் கலாசார மண்டபத்தில் 10.06.2006 இல் இளைஞர் கலைக்கழகத்தினால் அறிமுக விழா நடாத்தப்பட்டது. 'நெய்தலம்' இயக்குநர் கலாநிதி அருள்திரு அ. பி. யெயசேகரம் தலைமையில் திரு. V. J. கொன்ஸ்ரன்ரைன் (இயக்குநர், நோயோ கல்சரல் கவுன்சில்) திரு. யோ. யோண்சன் ராஜ்குமார் (பிரதி இயக்குநர், திருமறைக் கலாமன்றம்) ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள். கழகச் செயலாளர் சி. எம். நெல்சன் நன்றி உரையுடன் விழா சிறப்பாக நடைபெற்று நிறைவெய்தியது.

## நூல் வெளியீடு

கவிஞர் அமரர் பி. மிக்கேல்ப்பிள்ளை 'தூயமணி' பாடிய 'போருக்குப் பின்' என்ற நாட்டுக் கூத்து நூல் 06.08.2006 ஞாயிறு மாலை 5 மணிக்கு கார்மேல் அன்னை மண்டபத்தில், இளைஞர் கலைக்கழகத்தால் வெளியீடு செய்யப்பட்டது. யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரீகதுறை தலைவர் அருள் கலாநிதி ஞா. பிலேந்திரன் தலைமை தாங்கி நடாத்தினார். யாழ் கோட்டக்கல்வி பணிப்பாளர் திரு. S.S. தங்கராசா, V. J. கொன்ஸன்ரைன் ஆகியோர் சிறப்புரையும், திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் ஆய்வுரையையும் நிகழ்த்தினர். வரவேற்புரை கு. இராயப்பு அவர்களும், ஆசியுரை அருள் கலாநிதி யோ. எ. யெயசீலன் அவர்களும் நன்றியுரை திரு. ம. றேபட் கட்சன் வழங்கினர். இவ் விழா சிறப்பாக நடைபெற்றது.

## மகஜர்கள்

கடந்த ஆனி மாதம் 11ஆம் திகதியில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலைக்கு முன்னர் குருநகரைச் சேர்ந்த 1200 பேர் மடுத்திருப்பதிக்குச் சென்று திரும்ப முடியாத நிலையில் அங்கேயே தங்கியிருக்கிறார்கள். அவர்கள் விரைவில் சொந்த இடத்திற்கு திரும்ப ஆவன செய்யுமாறு யாழ். ஆயர் அவர்களுக்கு மகஜரும், மடுத்திருப்பதிக்கு யாத்திரிகர்களாகச் சென்ற மக்களுக்கு சகல வசதிகளையும் ஏற்படுத்தி முன்னின்று பணியாற்றிய மன்னார் ஆயர் அவர்களுக்கு பொதுமக்கள், பொது அமைப்புக்கள் யாத்திரிகர்கள் உறவினர்கள் சார்பில் நன்றிக் கடிதமும் இளைஞர் கலைக்கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 52 கடற்தொழிலாளர்கள் வரமுடியாமல் வன்னிப் பிரதேசத்தில் தங்கியிருப்பதால் அவர்களும் சொந்த இடத்திற்கு திரும்பிட நடவடிக்கை மேற்கொள்ளவும், இந்தப் பிரச்சனையால் கடற்தொழிலாளருக்கு ஏற்பட்ட நஷ்ட விபரங்களை தெரியப்படுத்தியும் விரிவான மகஜர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்கத்தால் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## நிவாரணப்பணி

தற்போதைய நாட்டுப் பிரச்சினை காரணமான அசாதாரண சூழ்நிலையால் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாடு, மற்றும் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை ஆகியவற்றால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நெய்தலமும், இளைஞர் கலைக்கழகமும் இணைந்து 75 குடும்பங்களுக்கு உணவு பொருள் வழங்கியும், 160 சிறுவர்களுக்கும் மேலும் 25 குடும்பங்களுக்கு உணவு வசதியும் அளிக்கப்பட்டது.

இத்துடன் குருநகர் புனித யாகப்பர் ஆலய பங்கைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கு கனடா ஆன்மீகப் பணியக இயக்குநர் அருள்திரு தவராசசிங்கம் அவர்களின் நிதியுதவியுடனும், 500 குடும்பங்களுக்கு கியுடெக் நிறுவனத்தின் நிதியுதவியுடனும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது. இது, தற்போது புனித யாகப்பர் ஆலய பங்குத் தந்தையாக பணிபுரியும் அருள்திரு M. L. தயாகரன் அவர்கள் ஏற்பாடு செய்யப்பட்டு அருட்பணிச்சபை மூலம் விநியோகிக்கப்பட்டது.



# நெய்தலம்

மச்சான்:
தாழை மரத்தடியில் - நல்ல
தண்ணி அள்ளும் பூவாடி
காலைப் பொழுது முன்னே - என்
கண்ணில் படுவாயோடி

மச்சாள்:
முரல் வெண் சோற்றுடனே - நல்ல
முரல் மீன் கருவாட்டுடனே
வரால் கறியும் கொண்டு - அந்
நேரம் தான் வாறேன் மச்சான்

மச்சான்:
முறுக்கிய நூலெங்கடி - பாய்
மூட்டும் மரக்கோ லெங்கடி
சுருக்கும் பறியெங்கடி - அந்த
சுக்கான் கயிறெங்கடி

மச்சாள்:
பாளை மது வருந்தி - அந்த
பனந்தோப்பு கடலில்
காலைப் பொழுது முன்னே - நீங்க
கண்மூடி வைச்சிங்களே

மச்சான்:
சாளை இரை மீன் கொண்டு நல்ல
சாவாளைத் தூண்டில் குத்தி
நீள முரலும் கொண்டு - பெரும்
நெடுஞ் சீலா மீனும் கொண்டு
தாழம் பூச் சோலையிலே - நீ
தனித்து நின்றால் தான் நான் வருவேன்
ஆளன் அருகே வந்து - கொஞ்சம்
ஆறத் தழுவேனடி.

மச்சாள்:
வெற்றிலை பாக்கு மச்சான் - இது
விடிகாலைச் சோறு மச்சான்
சட்டியிலே போட்டிருக்கு - அதை
தவறாமல் கொண்டு போங்க.

மச்சான்:
நெஞ்சிலே நீயிருக்க - அந்த
நினைவெல்லாம் போயிருங்கோ
அஞ்சுகமே அஞ்சுகமே - கொஞ்சம்
அருகில் வாராயோடி

**அமரர் தூயமணி பி. மிக்கேல்பிள்ளை**



குருநகர் சென் ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தினால் (ஆதரவு: சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்), இல. 28 மாட்டின் வீதியிலுள்ள 'ஜெயந்த் சென்ரர்' இல் வடிவமைக்கப்பட்டு ஏ.சி.எம். அச்சகத்தில் அச்சிடப்பட்டது.